**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 17** **நாள்: 23.03.2026**

**வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் திரு.கன்ஷியாம் தோரி, இ.ஆ.ப., (Mr. Ghanshyam Thori, I.A.S.,) அவர்கள் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் காவல் துறை மற்றும் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் திரு.கன்ஷியாம் தோரி, இ.ஆ.ப., (Mr. Ghanshyam Thori, I.A.S.,) அவர்கள் தலைமையில், தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி எஸ். லட்சுமி பிரியா அவர்கள் முன்னிலையில், காவல்துறை அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (23.03.2026) அடையாறு மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் நன்னடத்தை நெறிமுறைகள் பின்பற்றி பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், காவல்துறை மற்றும் அலுவலர்களுடன் உரையாடி உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் அவர்கள் தலைமையில், காவல் துணை ஆணையர்கள், உதவி காவல் ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி செலவினப் பார்வையாளர்கள் குழு, கணக்குக் குழு, வீடியோ பதிவு செய்யும் குழு மற்றும் இதர தேர்தல் பணிகள் மேற்கொள்ளும் அலுவலர்களுடனான தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.என். காளிதாஸ், காவல் துணை ஆணையாளர்கள் திரு.ஏ.சி.கார்த்திகேயன், திரு.வி.ஆர்.சீனிவாசன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**